3rd April 1965]

திரு. மீ. கலியாணசுந்தரம்: நீலகிரி மாவட்டத்தில் எத்தனை உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன? அவற்றிற்கு ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தி அந்தப் பிரிவு சம்பந்தமான அலுவலகத்தை நீலகிரியில் வைத்து, அந்த அதிகாரி அங்கு போய் மேற்பார்வை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: 27 பள்ளிகள் என்று நினைக்கிறேன். அந்தப் பள்ளிகளை இப்பொழுது கோவையில் உள்ள ஸ்பெஷல் ஜில்லா கல்வி அதிகாரி பார்த்துக் கொண்டிருக்கிறார். நான் முன்பு கூறியதுபோல், பள்ளிகளின் எண்ணிக்கை அவர் பார்க்கக்கூடியதற்கு மேல் இருக்கிறது என்று ஏற்பட்டால், அப்பொழுது அதற்கு ஒரு தனிப் பிரிவு ஏற்படுவது பற்றி அரசாங்கம் கவனிக்கும்.

தனியார் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு விடுப்பு விதிகளைப் பயன் படுத்துதல்

* 419 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியன், சர்க்கார் உயர்நிலைப்பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்குள்ள ஓய்வு (லீவு) விதிகள் தனியார் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு மறுக்கப்படுகிறதென்ற புகார் சர்க்காருக்கு வந்ததா?

(இ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No.

(b) Does not arise.

திரு. து. ப. அழகமுத்து: தனியார் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்குச் சம்பளச் சலுகையுடன் கூடிய ஓய்வு சர்க்கார் பள்ளிகளைப்போல் கொடுக்கப்படுவதில்லை. அப்படிக் கொடுக்கப்படாமல் ஆசிரியர்கள் பழி வாங்கப்படுகிறார்கள். இதைத் தவிரப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தனிப்பட்டவர்கள் நடத்துகிற பள்ளிகளில் வேலை செய்கிற ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், ஒரு எக்ரிமெண்டு பேரில் அவர்கள் வேலை செய்கிறார்கள். அந்த எக்ரிமெண்டுபடி நடந்து கொள்ளவேண்டும். ஆனால், எங்கேயாவது மானேஜ்மெண்டாரால் பழி வாங்கப்படுகிறார்கள் என்ற புகார் சொல்லி, அது அரசாங்கத்திற்குத் தெரிந்தால், அரசாங்கம் கவனம் செலுத்தி அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. கோ. சி. மணி: தனியார் பள்ளிகளைப் பஞ்சாயத்து யூனியன்கள் விரும்பினால் எடுத்து நடத்தலாம் என்று உத்தரவிடுவது பற்றி அரசாங்கத்தின் எண்ணத்தில் ஏதாவது இருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு ஒன்றும் யோசனை இல்லை.

[3rd April 1965

திரு. எஸ். ஜே. ராமசாமி : தனியார் பள்ளிகளில் ஏறக்குறைய இம்மாதிரியான புகார்கள் நிறைய வந்திருக்கின்றன. சம்பளம் கூடக் கொடுக்கவில்லை என்ற புகார் வந்திருக்கிறது. அப்படியிருந்தும் தனியார் பள்ளிகளை, கிராண்டு கொடுக்கும் தனியார் பள்ளிகளை அரசாங்கமே ஏன் எடுத்து நடத்தக் கூடாது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், பஞ்சாயத்து யூனியன்கள் பற்றித்தான் அதிகமாகப் புகார்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆரம்பப்பள்ளிகளில் குழந்தைகளுக்கான நூல் நிலையங்கள்

* 420 கேள்வி—திரு. து. ப. அழகமுத்து : } திரு. கே. ஏ. மதியழகன் : } கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆரம்பப் பள்ளிகளில் குழந்தைகளுக்கான நூல் நிலையங்கள் அமைப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Provision has been made for matching funds for providing libraries in 1,000 higher elementary schools and 4,400 lower elementary schools including basic schools in each year of the III Plan.

திரு. எஸ். ஜே. ராமசாமி : எஜுகேஷன் டைரக்டர் ஆபீசில் நான் பார்த்திருக்கிறேன். படக்காட்சி, நூல் நிலையங்கள் போன்றவை அங்கே இருக்கின்றன. அதேபோல மாவட்டங்கள் தோறும் வைக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கேள்வி நூலகத்தைப் பற்றியது, படக் காட்சியைப் பற்றியது அல்ல.

புலவர் கா. கோவிந்தன் : ஒவ்வொரு பள்ளி நூலகத்திற்கும் ரூ. 15 தான் கொடுக்கப்படுகிறது என்று அறிகிறேன். ரூ. 15 போதாது. மேலும் சிறுவர்களுக்கு வேண்டிய அளவு புத்தகங்கள் இல்லை. சிறுவர்கள் விரும்பிப் படிக்கக்கூடிய, படங்கள் மூலம் பல கலர்களில் விளக்கங்கள் கொண்ட புத்தகங்களை அரசாங்கமே அச்சிட்டு வழங்குவதற்கு முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சிறுவர்களுக்குரிய புத்தகங்கள் தயாரிக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் உத்தேசம். இருக்கிற புத்தகங்களிலே, நூல்நிலையங்களிலே இதுவரையிலே வைக்கப்படாத புத்தகங்கள் ஏதேனும் இருந்தால், கனம் அங்கத்தினர் அவைகளை எழுதி அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது கவனிக்கப்படும். இப்பொழுது ஒரு தொடக்கமாகத்தான் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. லோயர் எலிமெண்டரி ஸ்கூலுக்கு ரூ. 15, ஹையர் எலிமெண்டரி ஸ்கூலுக்கு ரூ. 25, கவர்ன்மெண்டு லோயர் பிரைமரி ஸ்கூலுக்கு ரூ. 30, கவர்ன்மெண்டு அப்பர் பிரைமரி ஸ்கூலுக்கு ரூ. 50, இந்த விகிதாசாரத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.